மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொதுவாக ஆசிரியர்களுக்கு முறையாக ஊதியத்தை வழங்கிவிட்டு, அதற்குப் பின்னர் அதற்கான மானியத்தைப் பெற்றுக்கொள்வது அந்தந்த நிர்வாகத்தினரின் வேலையாகும். இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அந்தக் கணக்குகளைக் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பாமலிருப்பது முக்கியமான காரணமாக இருக்கிறது. கூடிய வரையில் அந்தந்த ஆண்டிலேயே மானியம் வழங்கலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு செய்திருக்கிறது. அப்படி வழங்கும் போது, நிர்வாகம் அவற்றைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் இருக்காது. உசிலம்பட்டி கல்லூரியைப் பொறுத்தவரையில், விசாரணை நடைபெற்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். விரைவில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தேவர் கல்லூரியிலே எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் ? ஒரு மாதத்திற்கு எவ்வளவு சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துத் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். சக்தி மோகன் : கல்லூரி ஆசிரியர்கள் பல காரணங்களைக் குறிப்பிட்டு உண்ணாவிரதம் போன்ற இயக்கங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் பல்கலைக் கழகம் நேரடியாகத் தலையிட்டு, ஆவன செய்ய வேண்டுமென்று நிர்வாகத்தின் தரப்பில் வேண்டுகோள் விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கைமீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசின் தீர்மானங்கள்

(1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது"

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 18 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறையின் 1—3—75 நாளிட்ட 305 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. கோ. சி. மணி, எம்.எல்.சி., சட்ட மன்ற மேலவையினால், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்ட சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 31/1959), 8வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், 28—2—1978 அன்று முடிவடைந்துள்ளதாலும் ;

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினை ஒட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை ;

"வேளாண்மைத் துறையின் 1—3—1975 நாளிட்ட 305 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. கோ. சி. மணி, எம்.எல்.சி. சட்டமன்ற மேலவையினால் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959), 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும் ;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், 28—2—1978 அன்று முடிவடைந்துள்ளதாலும் ;